**நிகழும் சோபகிருது வருடம் தை மாதம் 17 ஆம் நாள் (31.01.2024)**
**புதன்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் காலை 11.55 மணிக்கு**
**நடைபெற்ற அவசர கூட்டப் பொருள்**

**பொருள் எண்.1 :**

நாமக்கல் மாவட்ட நீதிமன்றங்களில் நாமக்கல் நகராட்சி ஆணையாளருக்கு எதிராக தொடரப்படும் வழக்குகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும், அவ்வழக்குகள் மீது துரிதமாக செயல்பட்டு நடத்திமுடிக்க வேண்டியிருப்பதாலும், நகராட்சி நிர்வாகத்தின் நலன் கருதி திருமதி. அமுதவல்லி, பி.ஏ.பி.எல்., 14, முதல்தளம், நகராட்சி கட்டிடம், பரமத்திரோடு, நாமக்கல் அவர்களை நாமக்கல் நகராட்சிக்கு கூடுதல்நிலை வழக்கறிஞராக நியமனம் செய்திடவும் மற்றும் நாமக்கல் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்குகளை நடத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 876/2012/சி1)**

**தீர்மானம் எண் : 56, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2 :**

நாமக்கல் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்கள், மனித ஆய்வுக்குழிகள் மற்றும் கழிவுநீரேற்று நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து கழிவுநீர் சேகரிப்பு அமைப்புகளையும் ஒப்பந்தமுறையில் தனியார் மூலமாக பராமரிக்கும் பணியை மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.23656/2013/டிஓ1, நாள்.21.11.2017 வாயிலாக அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு 29.12.2017 அன்று ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் Tamilnadu Water Supplys & Drainage System, Rasipuram, Namakkal நிறுவனத்தின் மூலமாக பராமரிப்பு பணிகள் 01.02.2018 முதல் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் மூலம் அனுமதி வழங்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்களுக்குள்ளாக பணிகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டது.

தற்போது ஆண்டு பராமரிப்பு பணிகள் 31.01.2024 உடன் முடிவடைய உள்ளது. தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் மூலம் அனுமதி வழங்கப்பட்ட ஒப்பந்த ஆவணத்தில் ஒப்பந்ததாரர் பராமரிப்பு பணிகளை திருப்திகரமாக மேற்கொள்ளும் நிலையில் அவருக்கு ஒப்பந்தத்தை நகராட்சி மன்ற அனுமதியுடன் நீட்டிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே Tamilnadu Water Supplys & Drainage System, Rasipuram, Namakkal நிறுவனம் திருப்திகரமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் அதே நிறுவனம் மூலமாக மேலும் ஓராண்டிற்கு (01.02.2024 முதல் 31.01.2025 வரை) அல்லது அரசால் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் அமர்த்த ஊதியம் நிர்ணயம் மற்றும் அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர்கள் நியமிக்கும் காலம் வரை பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், கடந்த ஆண்டு மதிப்பீட்டு தொகைக்குள்ளாக ரூ.105.84 இலட்சத்தில் பணியை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : -

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்: 348/2022/இ1)**

**தீர்மானம் எண் : 57, அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 3 :**

**நாமக்கல் நகராட்சியின் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தினசரி சந்தையின் மூன்று வளாகங்களையும் சமூக விரோதிகள் சேதப்படுத்தா வண்ணம் CCTV கேமிராக்கள் பொருத்தி கண்காணிக்க வேண்டியுள்ளது. எனவே, தினசரி சந்தையின் மூன்று வளாகங்களுக்கும் CCTV கேமிராக்கள் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது**

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.534/2024/இ3 )**

**தீர்மானம் எண் : 58, அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 4 :</u>**

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.69854/2023/ஜி4 எண்ணிட்ட 14.12.2023ஆம் தேதிய செயல்முறைகள் வாயிலாக நாமக்கல் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் நடத்துவது தொடர்பாக பல்வேறு துறைகளுக்கு பணி ஒதுக்கீடுகள் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 6 மக்களுடன் முதல்வர் முகாம்கள் நடத்த உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட முகாம்களில் கீழ்கண்ட முகாம்கள் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றதற்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ள செலவினத்தை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | மண்டபம் விவரம் | முகாம் நடைபெற்ற நாள். | செலவினத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | கொங்கு திருமண மண்டபம், பரமத்தி ரோடு, நாமக்கல் | 20.12.2023 | 36,950/– |
| 2 | சுப்புலட்சுமி திருமண மண்டபம், திருச்செங்கோ ரோடு, நாமக்கல் | 22.12.2023 | 5,000/– |

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 7575–2 /2023/அ1)**

**தீர்மானம் எண் : 59, அனுமதிக்கப்பட்டது**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**